**மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையம் - 2015**

---

மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107, 111 ஆம் பிரிவுகள் மற்றும் 2005 இன் 02 ஆம் இலக்க மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் கோவையின் 26 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிகழத்தக்க சொத்தாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்ட, மானியம் பெறுனர்களிடமிருந்து மீள அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட மானிய மீதி பட்டோலை மீதியை விட ரூபா 131,500 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2005 இன் 02 ஆம் இலக்க மானிடக் கலைகள் சமூகவியல் கட்டளைகளின் 7(9) ஆம் பந்தி | ஒரு வருடத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது ரீஜன்ட் கவுன்சில் கூட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக ரீஜன்ட் கவுன்சில் ஒரு தடவை மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குதல் பதவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், நிலையத்தினால் பதவிநிலைத்தரமற்ற உத்தியோகத்தர்களுக்கும் செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட 16 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 252,845 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 100,511 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 152,334 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஊழியர் ஊதியம் ரூபா 2,014,577 இனால் அதிகரித்திருந்த போதிலும் மீண்டெழும் மானியம் ரூபா 2,312,000 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது, மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 149,080 தொகையான பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டு முதல் இலாபத்தை அடைந்து கிரமமாக முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டு வரையில் ரூபா 252,845 மிகையொன்றாக மாதியிருந்தது. ஊழியர் வேதனம் மற்றும் பெறுமானத்தேய்வுகளைக் கவனத்தில் கொள்ளும்

போது நிலையத்தின் ஒட்டுமொத்த பங்களிப்பும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின்போது அது ரூபா 13,769,859 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

நிலையத்தின் நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் 1:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நடைமுறை விகிதம் 17 சதவீதத்தாலும், விரைவு விகிதம் 16 சதவீதத்திலும் குறைவடைந்திருந்தது. ஆண்டின்போது நிதி மானியங்கள் மானியப்பெறுனர்களுக்கு வழங்கப்படாமல் கடப்பாடாக ரூபா 34,378,174 தொகையான அளவு நிறுத்தி வைக்கப்பட்டமையின் காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய மட்டத்திலும் விஷேடமாக பல்கலைக்கழக முறைமையில் உள்ளடக்கப்பட்ட நிலையத்தின் விடயப்பரப்பிலுள்ள துறைகளில் ஆராய்ச்சிகளுக்கு புத்துயிரளித்தல் மற்றும் மனிதவளங்களை உருவாக்குதல் மற்றும் விருத்திக்கு பங்களித்தல், நவீன அறிவு மற்றும் முற்போக்கு கருத்துக்களை பின்பற்றி தேசிய வெற்றினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களித்தல், பட்டபின்படிப்புக் கற்கைக்காக தேசிய மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் வெளி வளவாளர்களினதும் நிபுணத்துவர்களினதும் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவகாசமளித்தல் என்பன நிலையத்தின் பிரதான நோக்கங்களாகும்.

2015 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 142 மானியப் பெறுனர்களுக்காக திறைசேரியினால் ரூபா 86,000,000 வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 44 புதிய மானியப் பெறுனர்களுக்காக ரூபா 29,460,000 தொகையும், தற்போது பட்டப்படிப்புக்களில் ஈடுபடும் மானிய நலன் பெறுனர்களின் எஞ்சிய தவணைக் கொடுப்பனவிற்காக ரூபா 54,140,000 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறே மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் விடயப்பரப்பிற்குரிய செயலமர்வுகள் மற்றும் 25 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.

நிலையத்தினால் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 407 மனியம் பெறுனர்களுக்காக மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தவணைப்பணம் வழங்கப்பட்ட 46 மானியப் பெறுனர்களுக்கு 2016 மே மாதம் வரை தமது பட்டப்படிப்பு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்ததுடன் அந்த மானிய பெறுனர்களுக்காக நிலையத்தினால் ரூபா 52,581,999 தொகை வழங்கப்பட்டிருந்தது.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2015 சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை முதுமானி / கலாநிதி மானியங்களை வழங்குவதற்காக நிலையத்திற்கு பொதுத் திறைசேரியிலிருந்து ரூபா 86,000,000 தொகை கிடைத்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,719,944 தொகை மாத்திரம் மானியமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 34,571,904 தொகை கடப்பாடாக (Commitment) நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதாவது மேற்கூறப்பட்ட விடயத்திற்காக நிறுவனத்திற்குக் கிடைத்த தொகையில் 43 சதவீதம் அளவில் 2015 ஆம் ஆண்டில் மானியம் பணமாக வழங்கப்படாது அடுத்த வருடத்தின் போது வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் இலக்கம் 12 இன் 9.2 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினருக்காக திறைசேரியிலிருந்து பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது இருக்கின்ற பதவியணியினர், வருடாந்த பாதீடு, கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்ற தகவல்கள் இந்த நிலையத்தின் 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தற்போது மானியம் வழங்கப்பட்டுள்ள 92 மானியப் பெறுனர்களுக்கு பட்டப்படிப்பு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 70,000,000 தொகையினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின்போது 79 மானிய பெறுனர்களுக்கு மாத்திரம் ரூபா 54,140,000 மானியம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ஆராய்ச்சிகளுக்கான புள்ளிவிபரப் பாடநெறி (Statistic for researchers) நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிலையம் தொடர்பாக 02 நாளிதழ்களை (NCAS Journal) பகிரங்கப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 01 நாளிதழை மாத்திரம் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் பாதீடு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 23 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2011 யூலை 05 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் போது வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்ட துறைகளுக்குப் புறம்பான ஏனைய துறைகள் தொடர்பாக விரிவுரையாளர்களுக்கு மானியங்களை வழங்குவதற்கு தேவைப்படுமாயின் ஒழுங்கு விதிக் கோவை திருத்தம் செய்யப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் இந்த செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி

வரையிலும் ஒழுங்கு விதிகளை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | மானியம் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு | சகல மானியப் பெறுனர்களினதும் கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஆ) | முற்பணக் கட்டுப்பாடு | பெற்ற முற்பணத்தைத் தாமதமின்றித் தீர்த்தல் மற்றும் தேவைக்குச் சமமாகின்ற அளவினை விஞ்சாத வகையில் முற்பணம் வழங்குதல் |